[27th November 1970

Malattaru Scheme

*8. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether there is any proposal with the Government regarding the Irrigation scheme known as "Malattaru Scheme" near Kamuthi in Ramanathapuram district ; and

(b) if so, the steps taken by the Government thereon ?

மலட்டாறு திட்டம்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதிக்கு அருகாமையில் 'மலட்டாறு திட்டம்' என்ற நீர்ப்பாசனத் திட்டம் பற்றி அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) மலட்டாறு திட்டத்திற்கான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, அவை உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது ? இந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்? நிறைவேற்றுவதற்கு எந்த வகையான உத்தரவுகள் அதிகாரிகளுக்கு அரசினிடமிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மலட்டாறுக்கு அருகே ஒரு புது ஏரி அமைக்கத் திட்டம் இருக்கிறது. 39 ஏரிகளுக்குத் தண்ணீர் பாய ஒரு அணை அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 50.25 லட்சம். இத்திட்டத்தினால் 3494 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படும். ஆயக்கட்டுகளில் பாசன வசதி 774 ஏக்கருக்குக் கிடைக்கும். தவிர 1500 ஏக்கருக்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும். இந்தத் திட்டம் இப்போது உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது. விவரங்கள் கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கபாண்டியன் : அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய இரண்டு தாலுக்காக்களும் ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிக்கு அடிக்கடி இலக்காகும் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்குப் பாசன வசதி தரும் இத்திட்டத்தை முதல் நிலைப்படுத்தி இந்த ஆண்டே துவக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நிறைய திட்டங்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைவேறிக்கொண்டுதான் இருக்கின்றன.